நெல்

தண்டு துளைப்பானின் தாக்குதல் தஞ்சாவூர் மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் காணப்படுகிறது. தண்டு துளைப்பானின் தாக்குதலை கட்டுப்படுத்த கார்டாப் 400 கிராம் 1 ஏக்கருக்கு அல்லது குளோரான்ட்ரினிலிபுரோல் ஏக்கருக்கு 60 மில்லி தெளிக்கலாம். தண்டு துளைப்பானின் வளர்ந்த அந்துப்பூச்சிகளின் நடமாற்றத்தை இனக் கவர்ச்சி பொரி ஏக்கருக்கு 5 வைத்து கண்காணித்து கட்டுப்படுத்தலாம். தற்போது நிலவும் அதிகரித்துள்ள வெப்பநிலையில் இலை செம்பேனின் தாக்குதல் கோடை நெற்பயிரில் காணப்படுகிறது. இதனை கட்டுப்படுத்த டைக்கோபால் 500 மில்லி ஏக்கருக்கு என்ற அளவில் தெளிக்கலாம்.

குலைநோய் தற்போது உள்ள கோடை பயிரில் தென்படுகிறது. இதனை கட்டுப்படுத்த டிரைக்கோசோல் 200கிராம் அல்லது அசாக்ஸிஸ்ரோபின் 200மிலி ஒரு ஏக்கருக்கு தெளிக்கலாம்.

பருத்தி

தற்போது பருத்தி பயிர் அறுவடை செய்யும் தருணத்தில் உள்ளது. அறுவடை செய்த பின் மீதம் உள்ள எஞ்சிய பருத்தி பயிறினை முழுவதுமாக அகற்றியோ அல்லது மடக்கி உழவு செய்ய வேண்டும். இதனால் நிலத்தில் தங்கி இருக்கும் பூச்சிகளின் உற்பத்தியை குறைக்கலாம். பருத்தி சாகுபடி துவங்கும் இந்த பருவத்தில் பருத்தி விதைகளை இமிடாகுளோபிரிட் 600 எப் எஸ் என்ற மருந்தை ஒரு கிலோ விதைக்கு 10 மில்லி என்ற அளவில் விதை நேர்த்தி செய்து விதைப்பதன் மூலம் சாறு உறுஞ்சும் பூச்சிகளான அசுவினி, இலை தத்துப்பூச்சி மற்றும் வெள்ளை ஈ ஆகியவற்றை கட்டுப்படுத்தலாம்.

கோவை, பெரம்பலூர் மற்றும் தருமபுரி மாவட்டங்களில் ஆல்டர்னேரியா இலைப்புள்ளி நோய், தண்டுகூன்வண்டு மற்றும் வேரழுகல் நோய் தாக்குதல் காணப்படுகிறது. தண்டுகூன்வண்டு மற்றும் வேரழுகல் நோயைக் கட்டுப்படுத்த ஒரு லிட்டர் தண்ணீருக்கு 2.5 மில்லி குளோர்பைரிஃபாஸ் மருந்துடன் ஒரு கிராம் கார்பன்டசிம் மருந்தை கலந்து வேர் பகுதி நனையும்படி ஊற்ற வேண்டும். 15 நாட்கள் கழித்து மருந்து கலவையை மீண்டும் ஒரு முறை ஊற்ற வேண்டும். மேலும் பருத்தியில் ஆல்டர்னேரியா இலைப்புள்ளி நோயைக் கட்டுப்படுத்த மேன்கோசெப் அல்லது தாமிர ஆக்ஸிகுளோரைடு 2 கிராம் / லிட்டர் மருந்தை நீரில் கலந்து 15 நாட்கள் இடைவெளியில் தெளிக்குமாறு விவசாயிகளுக்கு பரிந்துரைக்கப்படுகிறது.

காய்கறி பயிர்கள்

கத்தரி, வெண்டை மற்றும் தக்காளி பயிர்களில் இலை செம்பேனின் தாக்குதல் அனைத்து மாவட்டங்களிலும் தென்பட வாய்ப்புள்ளது. செம்பேன்களை கட்டுப்படுத்த டைக்கோபால் 2 மில்லி அல்லது ஸ்பைரோமேசிபன்0.5 மில்லி கலந்து தெளிக்க வேண்டும்.

தக்காளியில் இலைக்கருகல் நோய்த் தாக்குதல் தென்படுகிறது. ஆதலால் விவசாயிகள் மான்கோசெப் என்ற மருந்தை, ஒரு லிட்டர் நீருக்கு 2 கிராம் என்ற விகிதத்தில் கலந்து வாரமிருமுறை தெளிக்கவும். வெண்டையில் நரம்புத்தேமல் நோய்யை கட்டுப்படுத்த டைமெத்தோயேட் அல்லது மிதைல் டிமட்டான் லிட்டருக்கு 1 கி என்ற அளவில் 15 நாள் இடைவெளியில் உபயோகிக்கலாம்.

வெங்காயத்தில் இலை சருமத்தில் கொப்புளங்கள் மழை காலத்தில் ஏற்படும். இதனை கட்டுப்படுத்த ஒரு லிட்டர் நீரில் மேன்கோசெப் 2 கி அல்லது காப்பர் ஆக்ஸிகுளோரைடு 2.5 கிராம் என்ற விகிதத்தில் தெளிக்கவும்.

உருளைக்கிழங்கு

உருளைக்கிழங்கு பயிரை முட்டைக்கூடு நூற்புழு மற்றும் வேர்முடிச்சு நூற்புழுக்கள் மலைப்பகுதிகளான ஊட்டி மற்றும் கொடைக்கானல் போன்ற இடங்களில் 15-20 சத மகசூழல் இழப்பினை ஏற்படுத்துவதற்கான வாய்ப்புகள் உள்ளது. முட்டைக்கூடு நூற்புழு வெளிநாட்டிலிந்து பரப்பபட்டது. தாக்கப்பட்ட செடிகள் வளர்ச்சி குன்றி, வெளிர் நிறம் அடைவதுடன் பகல் நேரங்களில் வாடியது போன்று காணப்படும். வேர்முடிச்சு நூற்புழுக்கள் தாக்கும் பொழுது கிழங்குகளின் மேற்பரப்பில் 'மறு' அல்லது 'கழலை' காணப்படும். இதனை கட்டுப்படுத்த முட்டை கூடு நூற்புழுவின் தாக்குதலை தாங்கி வளரக்கூடிய இரகங்களான குப்ரி சுவர்ணா, குப்ரி சய்யாதிரி, போன்றவற்றை பயிர் செய்தல். பட்டாணி, முள்ளங்கி, வெள்ளைப்பூண்டு மற்றும் கோதுமை போன்ற பயிர்களுடன் பயிர் சுழற்சி செய்தல். கடுகுகை ஊடுபயிராக பயிர் செய்தல். ஒரு எக்டருக்கு 5 கிலோ சூடோமோனாஸ் (அ) *பர்புரிரோசிலியம் லில்லாசினம்* உயிரினக் கலவையை 100 கிலோ தொழு உரத்துடன் கலந்து இடவேண்டும்.

பழப்பயிர்கள்

பப்பாளி

பப்பாளி வளையப் புள்ளி வைரஸ் நச்சுயிரி நோய்

பப்பாளியில் வளையப் புள்ளி வைரஸ் நச்சுயிரி நோய் தாக்குதல் தென்படுகிறது.

இதனை கட்டுப்படுத்தஇ நடவு செய்வதற்கு 1 மாதத்திற்கு முன்பு இரு வரிசைகளில் மக்காச்சோள பயிரை தோட்டத்தைச் சுற்றி நடவும். பூச்சிகளைக் கட்டுப்படுத்த, மஞ்சள் வண்ண ஒட்டுப் பொறியை ஹெக்டருக்கு 12 என்ற எண்ணிக்கையில் வைக்க வேண்டும்.மேலும் லிட்டருக்கு வேப்பெண்ணெய் 1 மி.லி (அல்லது) அசிபேட் 1.5 மி.லி (அல்லது) இமிடாக்ளோபிரிட் 0.75 மி.லி என்ற அளவில் கலந்து நடவிலிருந்து நான்கு மாதம் வரை 1 மாத இடைவெளியில் தெளிக்கவும். நட்ட நான்காவது மற்றும் ஏழாவது மாதத்தில் 5 கிராம் துத்தநாக சல்பேட் மற்றும் 1 கிராம் போரிக் அமிலம் 1 லிட்டர் நீருக்கு என்ற அளவில் தெளிக்க வேண்டும்.

மக்காச் சோளத்தில் படைப்புழு தாக்குதல்

மக்காச் சோளத்தில் படைப்புழுவின் சேதம் அனைத்து மாவட்டத்தில் காணப்பட்டது. அனைத்து பகுதிகளிலும் மக்காச் சோள பயிர் அறுவடை செய்யப்பட்டுள்ளது. இந்த பகுதிகளில் இப் புழுக்களின் நடமாட்டம் மற்றும் சேதம் வேறு பயிர்களில் உள்ளதா என்பதை கண்காணிக்க வேண்டும்.

ஒருங்கிணைந்த கட்டுப்பாட்டு முறைகள்

- தொடர்ந்து மக்காச்சோளம் பயிரிடுவதை தவிர்க்க வேண்டும். பயிர் சுழற்சி முறையை பின்பற்ற வேண்டும்.

- வயலை ஆழமாக உழுது மண்ணில் உள்ள கூண்டு புழுக்களை வெளியேற்றி அழிக்கலாம்.
- வேப்பம் பிண்ணாக்கு ஏக்கருக்கு 100கிலோ அளவில் இடுவதால் மண்ணில் உள்ள கூண்டுபுழுவை அழிக்கலாம்.
- சரியான இடைவெளியில் மக்காச்சோளம் பயிரிடவேண்டும். மானாவாரியில் 45x20 செமீ மற்றும் பாசன பகுதிகளில் 60x25 செமீ இடைவெளி இருக்குமாறு பயிரிடுவதன் மூலம் புழுக்களின் நடமாட்டத்தை குறைக்கலாம்.
- பெவெரியா 10 கிராம் அல்லது இமிடாகுளோபிரிட் 10 கிராம் அல்லது தையோமீத்தாக்ஸம் 10 கிராம் ஒரு கிலோ விதையுடன் கலந்து விதை நேர்த்தி செய்ய வேண்டும்.
- விளக்குப்பொறி ஒன்றை ஒரு ஹெக்டேர் பரப்பில் வைத்து அந்துப்பூச்சிகளை கண்காணிக்க வேண்டும். விளக்குப் பொறியின் கீழ் ஒரு கலனில் தண்ணீருடன் மண்ணெண்ணை கலந்து வைப்பதன் முலம் அந்து பூச்சுகள் அதில் விழுந்து இறந்து விடும்.
- டெஸ்மோடியம் பயிரிடுவதன் முலம் இந்த பூச்சுகளை வயலில் இருந்து விரட்டலாம்.
- வரப்பு பயிராக சோளம், தட்டை பயறு, சூரியகாந்தி, சாமந்தி, மரவள்ளி ஆகியவற்றை பயிரிட்டு இந்த பூச்சிகளின் எண்ணிக்கையை குறைக்கலாம்.
- முட்டைக்குவியல்கள் மற்றும் புழுக்களை சேகரித்து அழிக்க வேண்டும்.
- மெட்டாரைசியம் பூஞ்சாண கலவையை ஒரு ஏக்கருக்கு 400 கிராம் அல்லது 400 மில்லி தெளித்து கட்டுப்படுத்தலாம்.
- கீழே கொடுக்கப்பட்டுள்ள மருந்துகளில் ஏதேனும் ஒன்றை கைத்தெளிப்பான் முலம் தெளித்து மக்காசோள படைப்புழுவை கட்டுப்டுத்தலாம் (ஒரு லிட்டர் நீருக்கு).

  அசாடிராக்டின் 1 இசி - 2 மில்லி (அ) தயோடிகார்ப் 75 டபிள்யு பி – 2 கிராம் (அ) எமாமக்டின் பென்சோயேட் 5 எஸ்ஜி – 0.4 கிராம் (அ) ஸ்பைநோசட் 45 எஸ்சி 3 மிலி – 0.5 மில்லி
- பூச்சி கொல்லி மருந்து தெளிக்கும் போது தொடர்ந்து ஒரே வகையான மருந்தை தெளிக்க கூடாது.
- பூச்சி மருந்து தெளிக்கும் போது மருந்து மக்காச்சோள பயிரின் குருத்துப்பகுதியில் படுமாறு தெளிக்க வேண்டும்,

**தென்னையை தாக்கும் பூச்சிகள்**

**சுருள் வெள்ளை ஈ - ஒருங்கிணைந்த கட்டுப்பாட்டு முறைகள்**

தென்னை சாகுபடி செய்யப்பட்டுள்ள அனைத்து இடங்களிலும் சுருள் வெள்ளை ஈ தாக்குதல் தற்போதும் தென்படுகிறது. இந்த வெள்ளை ஈக்கள் சாறை உறிஞ்சுவதன் முலம் இலைகள் பழுப்பு அடைந்து விடும். மேலும் இந்த பூச்சிகளின் உடலிலிருந்து தேன் போன்ற திரவம் சுரந்து இலையின் மேல் படுவதால் கரும் பூஞ்சாணம் தோன்றுகிறது. இதனால் இலைப் பரப்பின் மேல் கருப்பு நிற பூஞ்சாணம் படர்ந்து ஒளிச்சேர்க்கை பாதிக்கிறது. இதனால் மரங்களின் வளர்ச்சி குறைந்து காணப்படும்.

- வெள்ளை ஈக்களுடன் என்கார்சியா, கிரைசோபா மற்றும் பொறிவண்டுகள் சேர்ந்து காணப்படுகிறது. இயற்கை எதிரிகளான இவை பூச்சிகளை கட்டுப்படுத்தும். என்கார்சியா ஒட்டுண்ணிகளை பாதுகாத்து அவற்றின் மூலம் பூச்சிகளை கட்டுப்படுத்தலாம். என்கார்சியா

ஒட்டுண்ணியை ஆழியார் நகர் தென்னை ஆராய்ச்சி நிலையத்தில் பெற்றுக் கொள்ளலாம். மேலும் இந்தப் பூச்சியை உண்ணும் பொறி வண்டுகளை கோவை, பூச்சியியல் துறை, தமிழ்நாடு வேளாண் பல்கலைகழகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

- மஞ்சள் நிறத்தில் வளர்ச்சியடைந்த வெள்ளை ஈக்களை கவரும் தன்மையுடைய, மஞ்சள் நிற பாலித்தீன் தாள்களால் உருவாக்கப்படும் ஒட்டும் பொறிகள் (3 அடி நீளம், 1 அடி அகலம்) ஏக்கருக்கு, 10 என்ற எண்ணிக்கையில், ஆறு அடி உயரத்தில் ஆங்காங்கே தொங்க வைக்கலாம். பூச்சிகளின் வளர்ச்சியை தடுக்க, இலை மட்டைகளிலுள்ள ஓலைகளின் அடிப்பகுதியில் தண்ணீர் தெளிக்கலாம்.
- ஒரு லிட்டர் நீருக்கு வேப்பெண்ணை 30 மி.லி. அல்லது வேப்பங்கொட்டை சாறு 5 சதம் (50கிராம் / லிட்டர்) கலந்து தென்னை ஓலையின் அடிப்பகுதியில் படுமாறு தெளிக்கவும்.
- முக்கியமாக ரசாயன பூச்சிக்கொல்லிகள் பயன்படுத்துவதை முற்றிலும் தவிர்க்கவும்.

மேலும் தென்னையில் காண்டாமிருக வண்டு மற்றும் இரியோபிட் சிலந்தி ஆகியவற்றின் தாக்குதல் தென்படுகிறது.

- சாண எரு மற்றும் எருக்குழிகளை வயலில் இருந்து அகற்றி விட வேண்டும். எருக்குழிகளில் 2 சதம் கார்பரையில் கரைசல் அல்லது மெட்டாரைசியம் கலவையை ஊற்ற வேண்டும். இதனால் எருக்குழிகளில் உள்ள சிறிய காண்டமிருக வண்டின் புழுக்கள் அழிக்கப்படும்.
- மரத்தின் மேல் உள்ள பாதிக்கப்பட்ட மட்டைகளினுள் நாப்தலின் உருண்டையை 10 கிராம் + 100 மணல் கலந்து இட வேண்டும்.
- எரியோபிட் சிலந்தியை கட்டுப்படுத்த டைக்கோபால் 2.5 மில்லி ஒரு லிட்டர் நீரில் கலந்து இளம் குரும்பைகளில் படுமாறு தெளிக்க வேண்டும்.

தகவல்

1. இயக்குநர், பயிர் பாதுகாப்பு மையம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோவை – 3, தொலைபேசி – 0422 6611237.

2. பேராசிரியர் மற்றும் தலைவர், பூச்சியியல் துறை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோவை –3, தொலைபேசி – 0422 6611214.

3. பேராசிரியர் மற்றும் தலைவர், நோயியல் துறை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோவை –3, தொலைபேசி – 0422 6611226

4. பேராசிரியர் மற்றும் தலைவர், நூற்புழுவியல் துறை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோவை –3, தொலைபேசி – 0422 6611264.